300015

No. of Printed Pages : 8

**5161**

பதிவு எண் | 3 | 0 | 0 | 0 | 0 | 4 | 9 |

# தமிழ் இரண்டாம் தாள்
# Language – Part A – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(ii) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் **38**-க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

## பிரிவு - I
(மதிப்பெண்கள் - 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **5x1=5**

**1.** 'மாடு' என்னும் சொல் _________ ஆகும்.
(அ) உயர்திணைப் பொதுப்பெயர்
(ஆ) அஃறிணைப் பொதுப்பெயர்
(இ) விரவுப் பெயர்

**2.** மேற்கு + நாடு என்பது _________ எனச் சேரும்.
(அ) மேற்கு நாடு (ஆ) மேநாடு (இ) மேனாடு

[ திருப்புக

3. மருத நிலத்திற்குரிய தெய்வம் _________.
(அ) முருகன் (ஆ) திருமால் (இ) இந்திரன்

4. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது _________.
(அ) வஞ்சித்திணை (ஆ) காஞ்சித் திணை (இ) வாகைத்திணை

5. 'உலகு' என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு _________ ஆகும்.
(அ) நாள் (ஆ) காசு (இ) பிறப்பு

## பகுதி - 2

**கோடிட்ட** இடத்தை நிரப்புக. **5x1=5**

6. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது _________.

7. 'வரும் வண்டி' என்பதில் உள்ள மகரம் _________ மாத்திரை அளவு ஒலிக்கும்.

8. நன்னூல் கிடைக்குமா? எனக் கடைக்காரரிடம் கேட்பது _________ வினா.

9. செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது _________.

10. 'மலரன்ன சேவடி' இச் சொல்லில் அமைந்துள்ள உவம உருபு _________.

## பகுதி - 3

**சுருக்கமாக** விடையளிக்க. **10x1=10**

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. உருவகத்தை உவமையாக மாற்றுக:
முகமதி

13. தொகைச் சொற்களை விரித்தெழுதுக.
மூவிடம்

14. ‘கீரியும் பாம்பும் போல’ – என்னும் உவமையை வாக்கியத்தில் அமைத்தெழுதுக.

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மை நீக்கி எழுதுக.
இன்று பேருந்துகள் ஓடாது.

16. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.
மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது.

17. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழுச் சொற்களை நீக்கி எழுதுக.
கதவைத் தாப்பாள் போட மறந்துட்டேன்

18. எவ்வகைத் தொடர்? – முருகன் நன்கு படித்ததால் முதல் மதிப்பெண் பெற்றான்.

**கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீட்டு எழுதுக.**

19. மண் என்றால் நிலம் என்பது பொருள் தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என ஐவகையாகப் பிரித்தனர்

20. கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.
கயிறு திரித்தல்.

## பிரிவு - II

(மதிப்பெண்கள் - 10)

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** விடையளிக்க. **5x2=10**

21. ஆய்தக் குறுக்கம் - எடுத்துக்காட்டுடன் விளக்குக.

22. முற்றெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

23. அடுக்குத் தொடரும் இரட்டைக் கிளவியும் எவ்வாறெல்லாம் வேறுபடுகின்றன?

[ திருப்புக

24. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

25. மையீற்றுப் பண்புப் பெயர்கள் நான்கினை எழுதுக.

26. நால்வகைப் பாக்கள் யாவை?

27. பாடாண் திணை விளக்குக.

## பிரிவு - III

(மதிப்பெண்கள் - 50)

**குறிப்பு :** பகுதி 3 -இல் வினா எண் 35 -இல் காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்கு** விடையளிக்க. **2x5=10**

28. ஆசிரியப்பாவின் இலக்கணத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

29. "நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின் நீங்கின் அதனைப் பிற" - இதில் பயின்றுள்ள அணியை விளக்குக.

**அல்லது**

தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **இரண்டிற்கு** ஒவ்வொன்றிற்கும் **அரைப்பக்க** அளவில் விடையளிக்க. **2x5=10**

**31.** இலிண்ட்கிரென் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

**32.** தமிழகத்தில் நூலகத் துறையின் வளர்ச்சி பற்றிக் கட்டுரை எழுதுக.

**33.** அயோத்திதாசர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டினை விளக்குக.

## பகுதி - 3

**34.** (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. **3+2=5**

சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே?

வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனாலதான் லேட். சரி சரி பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கட் கிடைச்சுதா?

(ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றி எழுதுக.

25, 41, 150, 237

**35.** கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க. **3+2=5**

(அ) This is the age of computers. Computers are becoming more and more a part of every day life. Today in the running of business, firm, industrial concerns and Government department, lot of information processing is required. The computer is the superfast information processing unit.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் **இரண்டனுக்கு** இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

(1) Time is Gold

(2) Art is long but life is short

(3) All that glitters is not gold

(4) Live and let live

35. குறிப்பு: காது கேளாத மாணவர்களுக்கு மாற்று வினா. 5x1=5

நான்கு வயதில் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சலினால், இனி நடக்கவே முடியாது என மருத்துவரால் கூறப்பட்ட வில்மா ருடால்ப் என்னும் பெண்மணி, தன்னம்பிக்கையையும் விடா முயற்சியையும் கைவிடவில்லை. இடை விடாத பயிற்சியும் துணிவும் கொண்டு விளங்கிய வில்மா, பதின் மூன்று வயதில் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொண்டாள். 1960 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களில் பங்கு பெற்ற வில்மா, ஒரே ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்கங்களை வென்ற பெண்மணி எனப் பாராட்டப் பெற்றார்.

1. இனி நடக்கவே முடியாது என மருத்துவரால் கைவிடப்பட்டவர் யார்?
2. இவர் கைவிடாமல் இருந்தது எதனை?
3. எந்த வயதில் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டார்?
4. எந்த ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது?
5. ஒரே ஒலிம்பிக் போட்டியில் எத்தனை தங்கப் பதக்கங்களை வென்றார்?

## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றனுக்கு** விடையளிக்க. 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

மறுநாள் காலையில் தேர்வு தொடங்குகிறது. அன்று இரவு வெகு நேரம் கண் விழித்துப் படிக்கத் திட்டமிட்டிருந்தான் பார்த்திபன். நேரம் இரவு 10 -ஐ நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவன் எதிர்பாரா விதமாகத் தொலைபேசி ஒலித்தது...,

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் **எட்டு** வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

மழை அல்லது முயற்சி

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் **ஏதேனும் ஐந்தினை** எடுத்தெழுதுக. **1x5=5**

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்.
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள் தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.

-பாவேந்தர் பாரதிதாசன்

## பகுதி - 6

38. சுந்தரம் என்பவர் வங்கிக் கணக்கில் ₹ 5000/- செலுத்த வங்கிக்குச் செல்கிறார். தேர்வர் தன்னை சுந்தரமாகப் பாவித்து விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. **1x5=5**

## பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்க. **3+2=5**

மாறன் பத்தாம் வகுப்பு படிக்கிறான். சில நாட்களாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டு இருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்ததும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகிறான். காரணம் கேட்டால் உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

1. பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?
2. நாம் எப்படிப் பட்ட நண்பர்களோடு நட்பு கொள்ள வேண்டும்
3. இச் சூழலில் பயன்படுத்த வேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?

[ திருப்புக

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க.

விழி மாற்றுத் திறனாளி ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடுநேரமாகக் காத்துக் கொண்டு இருக்கிறார். அந்த வழியாகப் பலரும் கடந்து செல்கின்றனர். ஆனால் அவருக்கு உதவ ஒருவரும் முன் வரவில்லை.

1. இது போன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?
2. பிறருக்கு உதவுவதால் வெளிப்படும் பண்பு யாது?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் - 20)

### பகுதி - 1

40. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றனுக்கு** விடையளிக்க. **1x10=10**

(அ) நும் ஊரில் நூலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம் வரைக.

**அல்லது**

(ஆ) அலுவலக உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்க தன் விவரப் பட்டியல் தயாரிக்க.

### பகுதி - 2

41. கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்குக்** குறிப்புகளைக் கொண்டு **ஒரு பக்க** அளவில் கட்டுரை எழுதி தலைப்பு ஒன்று தருக. **1x10=10**

(அ) சுற்றுச் சூழல் - மாசுக் கட்டுப்பாடு - நீர் மாசு - நிலம் மாசு - காற்று மாசு - தீமைகள் - வழிகள்.

**அல்லது**

(ஆ) தமிழ்மொழி - தொன்மை - தனித்தன்மை - முத்தமிழ் - சொல்வளம் - உலகு நோக்கும் ஒற்றுமை - தமிழுக்கு வளம் சேர்த்தோர்.

-o0o-